

## தலைப்பு: சங்கமிக்கும் வேளை

வழங்கியோர்

**சங்கமிக்கும் வேளை**

கார் மேகமே கருணை உள்ளமே ,
பிறை விழி ஏந்திய பரி பாலனே ,
பட்சிகள் பறந்திட செங் கதிரவன் மறைந்திட,
பாற்கடல் பொங்கிடும் பொன்மாலை பொழுதினில்
கவிபாடி காத்து நின்றோம் நீ கரையும் காலம்
நோக்கி .

***இரமேஷ்***

**சங்கமிக்கும் வேளை**

நிலவும் சூரியனும் நேசிக்கிறது
நிழல் ஓவியங்களும்
பேசுகிறது
எதிரும் புதிருமாய் இருந்தாலும்
இயற்கையாய் இருவரும் அழகு தானே
கனவுகளை உடைத்த கதிரவனும்
நினைவுகளை தாங்கும் நிலவொளியும்
அலைகடலை தொடும் அழகினிலே
மலைத்துப் போனேன்
இவ்வேளையிலே
அதிகாலையும்
அந்திவேலையும் சங்கமித்ததால்
புள்ளினமும் புல்லினமும் தூங்கலையே.

***எ.வெங்கடாசலபதி.***

**சங்கமிக்கும் வேளை**

தினமும் எழும் சூரியனே...
நீ யாருக்காக எழுகிறாய்??..
உன்னை அன்பால் வணங்க துடிக்கும்
மானிடர்களுக்காகவா???..
உன் எதிரே தோன்ற துடிக்கும் அழகிய
வெண்ணிலவிற்காகவா...??
துணையே இல்லாத நிலவே நீ யாருக்காக
காத்திருக்கிறாய்..??!!
உன் காதல் பார்வையை சூரியன் மேல் வீசி
உன்வசமாக்கி நீ ஒளியூட்டினாய்..
மொத்தத்தில் இருளை தேடும் பகலே...
பகலை தேடும் இருளே அழகான ஓர் நிகழ்வு..

***இரா.பாலா***

**சங்கமிக்கும் வேளை**

காதல் கவிதை
கருத்து குவியல்
காலை சூரியனின்
கதிர்ஒளியில் மலருது
கண்னே நீங்காமல் நீ
கருத்துக்குள் இருந்தால்

**சங்கமிக்கும் வேளை**

நிலா பெண்ணே!
நீ அருகினில் இருந்த
நிமிடங்கள் என்
நினைவை விட்டு
நீங்கவில்லை
நித்திரையும் நிலைக்கவில்லை
நீண்டது நினைவுகள்
நீடித்ததோ நம் மலரும் நினைவுகள்
நித்தம் நித்தம் நீந்துகின்றேன்
நினைவுகளில்
நிஜமே
நினைத்துப் பார்க்கின்றேன்
நிகழ்ந்தவற்றை
நீர் வழிகிறது!
நிரம்பிய விழிகளில்!
நீ உடனிருந்த நேரம் நீராவி கூட நீர் ஆனது
நீ உச்சரித்த நியாயத்தில்
நிம்மதியும்
நிம்மதி இழந்தது
நினைவில் நீ ஒரு பாதி
நீ கூறிய
நிந்திக்கும் வார்த்தை
நீங்காமல் மறு பாதி!!!
நிலைத்துவிட்டது நிம்மதியின்மை
நிறைந்து விட்டது
நிசப்தமின்மை
நீங்கியது ஏனோ இம் மா
நிலத்தை விட்டு....

***எழிலரசி***

**சங்கமிக்கும் வேளை**

இருப்பதை இல்லாமல்
காண செய்வது ஒளியா ? ஒளியின்மையா ?

இல்லாததை இருப்பது போல் காண செய்வது இரவா ?
பகலா ?

பஞ்ச பூதங்களின் பௌத்திர மாற்றங்களின்
மாயஜாமன்றோ ?

கண் தெரியாத குருடன் என்றால் இரண்டும்
ஒன்றுதான்.
கண் திறந்த ஞானி என்றால் இரண்டும் ஒன்றுதான்.
இடைபட்ட மனிதன் என்பதனால் புரியாமல்
புலம்புகிறேன்.

***சிவக்குமார்***

**சங்கமிக்கும் வேளை**

இயற்கையின் வரிகளும் கவிதை பாடுதே,
இளம்பிறை சந்திரன் இப்பெண்ணின்
ஓரவிழியானதே,
ஆதவனின் உதயம் ஆண் மகனின் கண்ணானதே,
இயற்கையை ரசித்தால் என்னுள்ளும் கவிதை
உருவாகுதே.

LIFE LITERARY ASSOCIATION - SINGAPORE